






# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி


மலர் 1 இதழ் 38 17.09.2025

ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:



# உள்ளே....

## படித்து பின்பற்ற வேண்டிய

## முத்துக்கள்

## உபதேசங்கள்

# முத்துக்கள்

## 1.பகவான்

1. எப்போது தன்னை அடைவான் என்று எல்லா ஜன்மங்களிலும், அந்தர்யாமியாக இருந்து எதிர்பார்ப்பது
2. பக்தர்களை, ப்ராரப்த சரீரங்கள் யாவும் போகும்வரை எதிர்பார்த்து ரக்ஷிப்பது
3. பக்தர்களை ஸஞ்சித வினைகளின் பயனாகப் பிறப்புகளிலிருந்து காத்து, அவற்றைப் போக்கி
4. த்ருப்தர்களான . ப்ரபந்நர்களை சஞ்சிதம் ப்ராரப்தம் இவைகளிலிருந்து காப்பது
5. ஜன்மங்கள்தோறும் அவதரித்து ஆச்ரிதரை ஸம்ச்லேஷித்துக் காப்பது (காலக்ஷேபம் மூலமாகக் கேட்டுத் தெரியவும் --பகவத் விஷயம்)

## 2.ஸரணாகதி கத்யம்

ஆத்யாத்மிகாதி பௌதிகாதி தைவிக துக்க விக்ந கந்த ரஹிதஸ்த்வம்
த்வயமர்த்தானு ஸந்தானேன ஸஹ ஸதைவம் வக்தா யாவச்சரீர பாதமத்ரைவ ஸ்ரீ ரங்கே ஸுகமாஸ்வ நந

உடலில் நோய் போன்றவற்றாலும், மனித சக்திக்கு அப்பாற்பட்ட மழையின்மை போன்றவற்றாலும் பிற பிராணிகளின் செயலாலும் வரும் சிலவான சுகம் ஆகவும், துக்கமாகவும் வடிவு எடுக்கும். தடங்கல் சிறிதும் அற்ற நீர் சரணாகதி மந்த்ரத்தை, அதன் பொருளை முழுவதும் சிந்தித்த வண்ணமே, இப்போது சொன்ன மாதிரியாகவே எப்போதும் சொல்லிக்கொண்டே, எமக்குக் கைகர்யம் செய்ய உமக்குத் திருவரங்கம் போன்ற எமது அடியார்கள் உகந்த திவ்ய தேசத்திலே, இந்த உடல் விழும்வரை, மகிழ்ச்சியுடன் இருப்பீராக.

3.ப்ரபந்நன் மனம், வாக்கு, உடல் என்கிற முக்கரணங்களாலும்
1. மறக்கவேண்டியது--உலக இன்பங்களில் ஆசை
(புருஷார்த்தத்தில் ருசி குறையாமல் இருக்க )
2 . நினைக்க வேண்டியது --ஆசார்ய அநுக்ரஹம், அவர் உபகாரம்
(செய்ந்நன்றி கொல்லாமல் iruka)
3. சொல்லக்கூடாதது--தன் மேன்மை (கார்ப்பண்யம் அழியாமல்
இருக்க)
4. விலக்கவேண்டியது-- பகவத் அபசாரம் (பகவான் திருவுள்ளம்
நோகாமல் இருக்க)
5.சொல்லவேண்டியது--த்வயம் (உபாய நிஷ்டை மறவாமல்
இருக்க)
6. செய்ய வேண்டியது--பகவத், பாகவத, ஆசார்ய கைங்கர்யம்
( புருஷார்த்தம் குறையாமல் இருக்க )

4.ப்ரஹ்ம வித்யைகள் 32---இவை, 1.சாந்தோக்யம்
2.முண்டகோபநிஷத் 3.ப்ரஹதாரண்ய உபநிஷத் 4. தைத்திரியம்
5.சுபாலோபநிஷத் 6.ஸ்வேதாஸ்வர உபநிஷத் 7.ஈசாவாச்யம்
8.கேநோபநிஷத் என்கிற எட்டு உபநிஷத்துக்களில்
விளக்கப்பட்டுள்ளன இந்த உபநிஷத்துக்களில்
விவரிக்கப்பட்டுள்ள (பக்தி யோகத்துக்கான) மிகக்
கடினமானப்ரஹ்ம வித்யைகள் 32. இவை உபாஸனா
மார்க்கங்கள்.

| | | |
|---|---|---|
| 1. அக்நி வித்யை<br>2. அக்ஷர வித்யை<br>3. ஆனந்த வித்யை<br>4. அபிம்ருத்யுபாஸன வித்யை<br>5. பாலாகி வித்யை<br>6. பூமி வித்யை<br>7. ப்ரஹ்ம வித்யை<br>8. சாண்டில்ய வித்யை | 12.மது வித்யை<br>13. மைத்ரேயி வித்யை<br>14. கௌரக்ஷஜ்யோதிர் வித்யை<br>15. ந்யாஸ வித்யை<br>16. பஞ்சாக்னி வித்யை<br>17.பரவித்யை<br>18. பர்யங்க வித்யை | 23. புருஷாத்ம வித்யை<br>24. ரைக்வ வித்யை<br>25. புருஷோத்தம வித்யை<br>26. ஸத் வித்யை<br>27. ஸர்வ பரவித்யை<br>28. ஷோடஸகல ப்ரஹ்ம வித்யை<br>29. உத்கீத வித்யை |

| | | |
|---|---|---|
| 9. தஹர வித்யை<br>10. ஜ்யோதிர் வித்யை<br>11. கோஸவிஜ்ஞான வித்யை | 19. ப்ரஜாபதி வித்யை<br>20. ப்ராண வித்யை<br>21. ப்ரதர்ன வித்யை<br>22. புருஷ வித்யை | 30. உபகோஸல வித்யை<br>31. வைஷ்ணவ வித்யை<br>32. வைச்வாநர வித்யை |

*5. ஸ்ரீ உடையவர் ஸரணாகதி கத்யத்தில் கூறுகிறார்*

***மதீயானாதி கர்ம ப்ரவாஹ ப்ரவ்ருத்தாம்***
***பகவத் ஸ்வரூப திரோதானகரீம் விபரீத ஜ்ஞான ஜனனீம்***
***ஸ்வவிஷயாயாஸ்ச போக்த புத்தேர் ஜனனீம்***
***தேஹேந்த்ரியத்வேன போக்யத்வேன***
***சூக்ஷ்மரூபேண சாவஸ்திதாம் தைவீம் குணமயீம் மாயாம்***
***தாஸபூத் சரணாகதோஸ்மி தவாஸ்மி தாஸ: இதி வக்தாரம்***
***மாம் தாரய***

இந்தப் "ப்ரக்ருதி" இருக்கிறதே, இது, அநாதிகாலமாக அடியேன் செய்த கர்மவினை என்கிற ஆற்று வெள்ளத்தில் அடித்துத் தள்ளப்பட்டு பகவானின் ஸ்வரூபத்தை அறியாதபடி செய்கிறது. நாராயணன், பரமன்; அவனுக்கு நாம் நல்லடியோம் என்கிற நல்ல எண்ணங்கள் தோன்றாதபடி தடுத்து, அதற்கு எதிரான எண்ணங்களை நினைக்கச் செய்கிறது. ஒரு பொருளை, வேறு ஒரு பொருளாக நினைக்கச் செய்கிறது. தனக்குத் தானே இன்பமானவன் என்கிற எண்ணத்தைத் தோன்றச் செய்கிறது. மாயாவித்யை செய்பவன், காண்பவரை மயக்க, தன் கையில் மயில்தோகை வைத்திருப்பதைப் போன்று ப்ரக்ருதியானது, சரீரத்தையும், இந்த்ரியங்களையும் தன்வசம் வைத்து ஜீவனை மயக்கி அவன் உண்மையை அறியாமல், அவனுக்குத் தவறான அறிவைக்கொடுத்து, புலன் இன்பங்களில் ஈடுபடச் செய்கிறது. "நான் உமக்கு அடிமை; உம்மையே தஞ்சமாகப் பற்றினேன்" என்று சரணாகதி மந்த்ரத்தைச் சொல்லும் அடியேனை, இந்தப் ப்ரக்ருதி ஸம்பந்தத்திலிருந்து தாண்டும்படி செய்து அருளவேணும்.

## 6.மஹாபாரதம் --உத்யோக பர்வம்

பாபம் ப்ராஜ்ஞாம் நாசாயதி க்ரியமாணம் புந:புந :நஷ்டப்ரஜ்ஞ : பாபமேவ புநராரபதே நர :என்கிறபடியே

மறுபடியும் மறுபடியும் தொடர்ந்து செய்கின்ற பாபம் அறிவை அழிக்கிறது; ஜீவன் -- இழப்பதால், மேலும் மேலும் பாவங்களையே செய்கிறான்.

